ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2181/23 - 2020 ජූනි මස 26 වැනි සිකුරාදා - 2020.06.26

*2181/23 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு யூன் மாதம் 26 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்டங்கள் அறவீட்டுச் சட்டம்**

*2 ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்டங்கள் அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ், எனக்குரித்தாக்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் நிதி, பொருளாதாரம் மற்றும் கொள்கை அபிவிருத்தி அமைச்சர் மஹிந்த ராஜபக்ஷ ஆகிய நான், இக்கட்டளை மூலம் இதற்கான அட்டவணையின் I ஆம் நிரலில் குறித்துரைக்கப்படும் வியாபாரப் பண்ட இனம் தொடர்பில், அவ்வட்டவணையின் II ஆம் நிரலிலுள்ள நேரொத்த பதிவீடுகளில் குறித்துரைக்கப்படும் வீதங்களில் விசேட வியாபாரப் பண்ட அறவீடொன்றை விதிக்கின்றேன்.*

*இக்கட்டளை 2020, யூன் மாதம் 27 ஆந் திகதி முதல் ஆரம்பமாகும் 06 மாத காலப்பகுதிக்காக, 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்டங்கள் அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (3) ஆம் உப பிரிவின் ஏற்பாடுகளுக்கு அமைவாக செல்லுபடியுடையதாதல் வேண்டும்.*

*2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்டங்கள் அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் மேற்கொள்ளப்பட்டதும் 2020.05.21 ஆந் திகதிய 2176/18 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்டதுமான மரக்கறி எண்ணெய்கள் (எச். எஸ். தலைப்புக்கள் 15.07, 15.11, 15.12, 15.13) தொடர்பான கட்டளையானது, 2020, யூன் மாதம் 27 ஆந் திகதியிலிருந்து வலுவுக்கு வருமாறு மீளப்பெற்றுக்கொள்ளப்படுகின்றது.*

**மஹிந்த ராஜபக்ஷ,**
*நிதி, பொருளாதாரம் மற்றும் கொள்கை அபிவிருத்தி அமைச்சர்.*

*நிதி, பொருளாதாரம் மற்றும் கொள்கை அபிவிருத்தி அமைச்சு,*
*கொழும்பு 01,*
*2020, யூன் 26.*

1A-PG 5035 — 567 (2020/06)
*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**அட்டவணை**

| I ஆம் நிரல் | | | | II ஆம் நிரல் |
|---|---|---|---|---|
| வியாபாரப் பண்ட இனம் | | | | விசேட வியாபாரப் பண்ட அறவீடு |
| இல. | இ.மு. தலைப்பு | இ.மு. குறியீடு | விவரணம் | |
| 01. | 15.07 | | சோயா அவரை எண்ணெய்யும் அதன் பகுதிகளும் சுத்தமாக்கப்பட்டவை அல்லது சுத்தமாக்கப்படாதவை. எனினும், இரசாயன முறையில் மாற்றி அமைக்கப் படாதவை | |
| | | 1507.10 | செம்மை செய்யப்படாத எண்ணெய் அல்லது கோந்து (பிசின்) நீக்கப்பட்டவை அல்லது கோந்து நீக்கப் படாதவை | கி. கிராம் ஒன்றுக்கு ரூபா 250.00 |
| | | 1507.90 | பிற | கி. கிராம் ஒன்றுக்கு ரூபா 275.00 |
| | 15.11 | | பாம் எண்ணெய் அதன் பகுதிகளும் சுத்தமாக்கப்படா தவை அல்லது சுத்தமாக்கப்பட்டவை. எனினும், இரசாயன முறையில் மாற்றி அமைக்கப்படாதவை | |
| | | 1511.10 | செம்மை செய்யப்படாத எண்ணெய் | கி. கிராம் ஒன்றுக்கு ரூபா 250.00 |
| | | 1511.90 | பிற | |
| | | 1511.90.10 | உள்ளக வெப்பநிலையில் தொடர் பிரிவுகள் (பாம் ஸ்ரியரின்) | கி. கிராம் ஒன்றுக்கு ரூபா 250.00 |
| | | 1511.90.20 | 210 லீற்றர் மற்றும் அதற்குக் குறைவான பொதி களில் இருந்து இறக்குமதி செய்யப்படும் “பாம்” எண்ணெய் | கி. கிராம் ஒன்றுக்கு ரூபா 275.00 |
| | | 1511.90.30 | செம்மை செய்யப்படாத பாம் ஒலெய்ன் | கி. கிராம் ஒன்றுக்கு ரூபா 255.00 |
| | | 1511.90.90 | பிற | கி. கிராம் ஒன்றுக்கு ரூபா 275.00 |
| | 15.12 | | சூரியகாந்தி விதை, சாவ்பூ அல்லது பருத்தி விதை இவைகளின் எண்ணெய்களும் அவற்றின் பகுதிகளும் சுத்தமாக்கப்படாதவை அல்லது சுத்தமாக்கப்பட்டவை. எனினும், இரசாயன முறையில் மாற்றி அமைக்கப் படாதவை | |
| | | | சூரியகாந்தி விதை, சாவ்பூ எண்ணெய்களும் அதன் பகுதிகளும் | |
| | | 1512.11 | செம்மை செய்யப்படாத எண்ணெய் | கி. கிராம் ஒன்றுக்கு ரூபா 250.00 |
| | | 1512.19 | பிற | கி. கிராம் ஒன்றுக்கு ரூபா 275.00 |
| | 15.13 | | தேங்காய் (கொப்பறா) பாம் வித்தகவிழையம் அல்லது பாபஸ்ஸி எண்ணெய்யும் அவற்றின் பகுதிகளும் சுத்த மாக்கப்படாதவை அல்லது சுத்தமாக்கப்பட்டவை. எனினும், இரசாயன முறையில் மாற்றி அமைக்கப் படாதவை தேங்காய் (கொப்பறா) எண்ணெய்யும் அதன் பகுதிகளும்<br>தேங்காய் (கொப்பறா), எண்ணெய்யும் அதன் பகுதிகளும் | |
| | | 1513.11 | செம்மை செய்யப்படாத எண்ணெய் | |
| | | | மொத்தமாக : | |
| | | 1513.11.11 | சுத்தமான தேங்காய் எண்ணெய் | கி. கிராம் ஒன்றுக்கு ரூபா 150.00 |
| | | 1513.11.19 | பிற | கி. கிராம் ஒன்றுக்கு ரூபா 150.00 |

**அட்டவணை** *(தொடர்ச்சி)*

| *I ஆம் நிரல்* | | | | *II ஆம் நிரல்* |
|---|---|---|---|---|
| *வியாபாரப் பண்ட இனம்* | | | | *விசேட வியாபாரப் பண்ட அறவீடு* |
| *இல.* | *இ.மு. தலைப்பு* | *இ.மு. குறியீடு* | *விவரணம்* | |
| | | | பிற : | |
| | | *1513.11.21* | சுத்தமான தேங்காய் எண்ணெய் | கி. கிராம் ஒன்றுக்கு ரூபா 150.00 |
| | | *1513.11.29* | பிற | கி. கிராம் ஒன்றுக்கு ரூபா 150.00 |
| | | *1513.19* | பிற : | |
| | | *1513.19.10* | மொத்தமாக | கி. கிராம் ஒன்றுக்கு ரூபா 175.00 |
| | | *1513.19.90* | பிற | கி. கிராம் ஒன்றுக்கு ரூபா 175.00 |
| | | | பாம் வித்தகவிழை எண்ணெய் அல்லது பாபசு எண்ணெய்யும் அதன் பகுதிகளும் | |
| | | *1513.21* | செம்மை செய்யப்படாத எண்ணெய் | கி. கிராம் ஒன்றுக்கு ரூபா 250.00 |
| | | *1513.29* | பிற | கி. கிராம் ஒன்றுக்கு ரூபா 275.00 |

*07-380*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.